# MASS INTERVIEWER IN PUBLIC HEALTH AND PREVENTIVE MEDICINE DEPARTMENT AND SOCIAL CASE WORK EXPERT IN PRISONS & CORRECTIONAL DEPARTMENT IN TAMIL NADU PUBLIC HEALTH SUBORDINATE SERVICE AND TAMIL NADU JAIL SUBORDINATE SERVICE – 9/12/2023 to 10/12/2023

1. With none to console, tears of hapless citizens will
   a. ruin the country
   b. kill human beings
   c. destroy the wealth
   **d. reduce strength**
   e. Answer not known
   அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் - என்ன செய்யும்?
   a. நாட்டை அழிக்கும்
   b. மனிதனை மாய்க்கும்
   c. செல்வத்தைத் தேய்க்கும்
   d. வலிமையை வீழ்த்தும்
   e. விடை தெரியவில்லை

2. Match the following

| **Books** | **Special Titles** |
|---|---|
| A. Thirumurukatruppadai | 1. Malaipadukadaam |
| B. Kootharatrupadai | 2. Nenjaatrupadai |
| C. Agananooru | 3. Pulavaraatrupadai |
| D. Mullaipattu | 4. Nedunthogai |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. Answer not known

பொருத்துக.

| **நூல்** | **சிறப்புப்பெயர்** |
|---|---|
| A. திருமுருகாற்றுப்படை | 1. மலைபடுகடாம் |
| B. கூத்தராற்றுப்படை | 2. நெஞ்சாற்றுப்படை |
| C. அகநானூறு | 3. புலவராற்றுப்படை |
| D. முல்லைப்பாட்டு | 4. நெடுந்தொகை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

3. Match the following

| | |
|---|---|
| A. Sirupanjamoolam | 1. Epic Literature |
| B. Kudumpa Vilakku | 2. Sangam Literature |
| C. Seevaga Sinthamani | 3. Moral Literature |
| D. The Kalitokai | 4. Contemporary Literature |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **4** | **1** | **2** |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. Answer not known

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு

A. சிறுபஞ்சமூலம் — 1. காப்பிய இலக்கியம்
B. குடும்ப விளக்கு — 2. சங்க இலக்கியம்
C. சீவக சிந்தாமணி — 3. அற இலக்கியம்
D. கலித்தொகை — 4. தற்கால இலக்கியம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **3** | **4** | **1** | **2** |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

4. To what is the Humane Quality of person compared in Thirukkural as: "Maandhar Ullathin Uyarvu"

**a. Vellathanaiya Malar Neetam**
b. Kadalin Anna Aazham
c. Vanathalavu Uyarvu
d. Nilathai Pondra Parappu
e. Answer not known

திருக்குறளில் "மாந்தரின் உள்ளத்து உயர்வு" எதனோடு ஒப்பிடப்படுகிறது?

a. வெள்ளத்தனைய மலர் நீட்டம்
b. கடலின் அன்ன ஆழம்
c. வானத்தளவு உயர்வு
d. நிலத்தைப் போன்ற பரப்பு
e. விடை தெரியவில்லை

5. Choose the correct answer

1. Pagalvellum Kookaiyai Kakkai
2. Nedum Punalul Vellum Mudhalai
3. Peelipei Sagadum Achchirum
4. Kaalal Kalarin Nariyadum

a. 1 and 2 Kaalam Arithal; 3-Idam Arithal; 4-Valiyarithal
**b. 1-Kaalam Arithal; 2 and 4-Idam Arithal; 3-Valiyarithal**
c. 1-Kaalam Arithal; 2 and 3-Idam Arithal; 4-Valiyarithal
d. 1 and 4 Kaalam Arithal; 2-Idam Arithal; 3-Valiyarithal
e. Answer not known

கீழ்க்காணும் கூற்றுக்குரிய சரியான விடையைத் தேர்நதெடுக்கவும்.

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை
2. நெடும் புனலுள் வெல்லும் முதலை
3. பீலிபெய் சாகாடும் அச்சிறும்
4. காலாழ் களரின் நரியடும்

a. 1 மற்றும் 2 காலம் அறிதல், 3-இடம் அறிதல், 4-வலி அறிதல்
b. 1-காலம் அறிதல், 2 மற்றும் 4-இடம் அறிதல். 3-வலி அறிதல்
c. 1-காலம் அறிதல், 2 மற்றும் 3-இடம் அறிதல், 4-வலி அறிதல்
d. 1 மற்றும் 4 காலம் அறிதல், 2-இடம் அறிதல், 3-வலி அறிதல்
e. விடை தெரியவில்லை

6. How did Seethalai Sathanaar say to Ilango Adigal after he had narrated the story of Kovalan and Kannagi?
a. Neerae Adigal Aruluga
b. Aruluga Adigal Neerae
c. Neerae Aruluga Adigal
**d. Adigal Neerae Aruluga**
e. Answer not known
கோவலன் கண்ணகி கதையைக் கூறிய சீத்தலைச் சாத்தனார் இளங்கோவடிகளிடம் எம்முறையில் கூறினார்?
a. நீரே அடிகள் அருளுக
b. அருளுக அடிகள் நீரே
c. நீரே அருளுக அடிகள்
d. அடிகள் நீரே அருளுக
e. விடை தெரியவில்லை

7. "It is an indubitable fact that the South Indian Brahmi epigraphs are all associated with the Buddhists… Little wonder therefore that the inscriptions are dominated by Prakrit element." Who said this?
a. Dr. K.A. Nilakanta Sastri
b. Dr. N.P. Chakravarti
**c. Dr. K.K. Pillay**
d. Dr. T.V. Mahalingam
e. Answer not known
"தென்னிந்திய பிராமி கல்வெட்டுகள் எல்லாம் சந்தேகப்பட முடியாத அளவிற்கு பௌத்தர்களோடு தொடர்புடையவை என்பதே உண்மையாகும்… அப்படியாயின் பிராக்ருத அடிப்படைக் கொள்கைகளே கல்வவெட்டியலில் கோலோச்சின் என்றால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை" இது யாருடைய கூற்று?
a. முனைவர் K.A. நீலகண்ட சாஸ்திரி
b. முனைவர் N.P. சக்கரவர்த்தி
c. முனைவர் K.K. பிள்ளை
d. முனைவர் T.V. மஹாலிங்கம்
e. விடை தெரியவில்லை

8. Which book is referred to as 'Porutkalavai Nool'?
a. Padhitrupathu
b. Natrinai
c. Iyngurunooru
**d. Paripaadal**
e. Answer not known
பொருட்கலவை நூல் என்று அழைக்கப்படும் நூல் எது?
a. பதிற்றுப்பத்து
b. நற்றிணை
c. ஐங்குறுநூறு
d. பரிபாடல்
e. விடை தெரியவில்லை

9. How many chapters are there in the section of virtue in Thirukkural (Arathupal)?
**a. 38** b. 48 c. 58 d. 68 e. Answer not known
திருக்குறள் - அறத்துப் பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை எத்தனை?
**a. 38** b. 48 c. 58 d. 68 e. விடை தெரியவில்லை

10. Which novel of Jeyaganthan is centered on Oedipus Complex?
a. Sila Nerangalil Sila Manithargal
b. Valkai Alaikirathu
**c. Rishimoolam**
d. Samugam Yenbathu Naaluper
e. Answer not known
இடிபஸ் உளச்சிக்கலை (Oedipus Complex) மையமாகக் கொண்டு ஜெயகாந்தன் எழுதிய நாவல் எது?
a. சிலநேரங்களில் சிலமனிதர்கள்
b. வாழ்க்கை அழைக்கிறது
c. ரிஷிமூலம்
d. சமூகம் என்பது நாலுபேர்
e. விடை தெரியவில்லை

11. Why did the Queen Hazrat Mahal Begum of Lucknow fight against the British?
a. Refused to pay tax to the British
**b. Against the Doctrine of Lapse**
c. Against the Revenue Policy
d. To expel the British

e. Answer not known

லக்னோவின் ராணி ஹஸ்ரத் மஹல் பேகம் பிரிட்டிஷாரை எதிர்த்தது ஏன்?

a. பிரிட்டிஷாருக்கு வரி கட்ட மறுத்து | b. அவகாசியிலி கொள்கையை எதிர்த்து

c. வருவாய் கொள்கையை எதிர்த்து | d. பிரிட்டிஷாரை வெளியேற்ற

e. விடை தெரியவில்லை

12. Match correctly the Authors with their works

(i) E.V.R Periyar — 1. Kamalambal Charithiram

(ii) C.N. Annadurai — 2. Padmavathi Charithiram

(iii) Madavaiya — 3. Kudiyarasu

(iv) Rajam Aiyar — 4. Velaikkari

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| **d.** | **3** | **4** | **2** | **1** |

e. Answer not known

நூல் ஆசிரியர்களை அதன் படைப்புகளுடன் சரியாக பொருத்துக.

(i) ஈ.வே.ரா. பெரியார் — 1. கமலாம்பாள் சரித்திரம்

(ii) சி.என் அண்ணாதுரை — 2. பத்மாவதி சரித்திரம்

(iii) மாதவய்யா — 3. குடியரசு

(iv) ராஜம் அய்யர் — 4. வேலைக்காரி

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| **d.** | **3** | **4** | **2** | **1** |

e. விடை தெரியவில்லை

13. When and where Periyar came out of congress and stated the Salt Respect Movement?

**a. Kanchipuram — 1925**

b. Chengalpet — 1929

c. Erode — 1930

d. Viruthunagar — 1937

e. Answer not known

எங்கே? எப்போது பெரியார் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார்

a. காஞ்சிபுரம் — 1925

b. செங்கல்பட்டு — 1929

c. ஈரோடு — 1930

d. விருதுநகர் — 1937

e. விடை தெரியவில்லை

14. Where did the Brahmi inscription mentioning musical svaras belong to the 2nd century A.D. has been discovered?

**a. Arachalur** | b. Arikkamedu | c. Adichanallur

d. Vangiri | e. Answer not known

கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இசை ஸ்வரங்கள் அடங்கிய பிராமி கல்வெட்டு எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?

a. அரச்சலூர் | b. அரிக்கமேடு | c. ஆதிச்சநல்லூர்

d. வனகிரி e. விடை தெரியவில்லை

15. Which one is not matching correctly?

(i) Kurinji - Punarthal
(ii) Mullai - Iruthal
(iii) Marudam - Udal
(iv) Neydal - Pirithal

a. (i) only b. (ii) only c. (iii) only
**d. (iv) only** e. Answer not known

கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்தவில்லை

(i) குறிஞ்சி - புணர்தல்
(ii) முல்லை - இருத்தல்
(iii) மருதம் - ஊடல்
(iv) நெய்தல் - பிரிதல்

a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (iii) மட்டும்
**d. (iv)** மட்டும் e. விடை தெரியவில்லை

16. Consider the following statement about Learning Enhancement Programme's methods

(i) English Tamil Picture Dictionary
(ii) Teacher Geometry Box
(iii) Story DVD
(iv) Twinning of Schools

a. (i), (ii) **b. (i), (ii) and (iii)** c. (i), (ii) and (iv)
d. (i), (iii) and (iv) e. Answer not known

கற்றல் மேம்பாட்டுத் திட்ட முறைகள் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளைக் கவனிக்கவும்

(i) ஆங்கிலம் தமிழ் சித்திர அகராதி
(ii) ஆசிரியர் வடிவியல் பெட்டி
(iii) எண்ணியல் ஒளிக்காட்சி தட்டு வடிவிலான கதைகள்
(iv) பள்ளிகளுக்கிடையிலான கூட்டு

a. (i), (ii) b. (i), (ii) மற்றும் (iii) c. (i), (ii) மற்றும் (iv)
d. (i), (iii) மற்றும் (iv) e. விடை தெரியவில்லை

17. Name the Award to the Boys and Girls who secure the first and second rank in the $12^{th}$ Public examination in each district

**a. Peraringar Anna Memorial Award** b. M.G. Ramachandran Memorial Award
c. M. Karunanithi Memorial Award d. J. Jeyalalitha Memorial Award
e. Answer not known

12ம் வகுப்பு பொதுத்தேர்வில், ஒவ்வொரு மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பிடிக்கும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் விருது

a. பேரறிஞர் அண்ணா நினைவு விருது b. M.G. ராமச்சந்திரன் நினைவு விருது
c. M. கருணாநிதி நினைவு விருது d. J. ஜெயலலிதா நினைவு விருது
e. விடை தெரியவில்லை

18. Chennai is the ____ largest electronic hardware manufacturing hub in India.

a. First **b. Second** c. Third d. Fourth e. Answer not known

இந்தியாவின் ______ பெரிய மின்னணு வன்பொருள் உற்பத்தி மையமாக சென்னை விளங்குகிறது.

a. முதலாவது b. இரண்டாவது c. மூன்றாவது
d. நான்காவது e. விடை தெரியவில்லை

19. Tamilnadu e-governance Agency has been registered under ______.

a. Right to Information Act
b. Right to Education Act
**c. Societies Act**
d. Companies Act
e. Answer not known

தமிழ்நாடு மின்-நிர்வாக நிறுவனம் ______ கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
a. தகவல் பெறும் உரிமைச்சட்டம்
b. கல்வி உரிமைச்சட்டம்
c. சமூக சட்டம்
d. நிறுவனச் சட்டம்
e. விடை தெரியவில்லை

20. Match the following:
As per the 2011 census, the juvenile sex ratio in the following districts are lower than the state average (943)

| | |
|---|---|
| (i) Namakkal | 1. 916 |
| (ii) Cuddalore | 2. 914 |
| (iii) Salem | 3. 891 |
| (iv) Ariyalur | 4. 896 |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **4** | **1** | **3** |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 3 | 2 | 1 | 4 |

e. Answer not known

பொருத்துக.
2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பின்வரும் மாவட்டங்களில் சிறார் பாலின விகிதம் மாநிலச் சராசரியை விட குறைவாக உள்ளது (943)

| | |
|---|---|
| (i) நாமக்கல் | 1. 916 |
| (ii) கடலூர் | 2. 914 |
| (iii) சேலம் | 3. 891 |
| (iv) அரியலூர் | 4. 896 |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **4** | **1** | **3** |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 4 | 1 | 3 | 2 |
| d. | 3 | 2 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

21. The first women driver who appointed for 108 Ambulance Van for the first time in the country
a. Tmt. Jeyalakshmi
b. Tmt. Mahalakshmi
**c. Tmt. Veeralakshmi**
d. Tmt. Muthulakshmi
e. Answer not known

108 அவசர மருத்துவ ஊர்திக்கு நாட்டிலேயே முதலாவதாக நியமிக்கப்பட்ட பெண் ஓட்டுநர் யார்?
a. திருமதி. ஜெயலட்சுமி
b. திருமதி. மகாலட்சுமி
c. திருமதி. வீரலட்சுமி
d. திருமதி. முத்துலட்சுமி
e. விடை தெரியவில்லை

22. The Kothari Commission (1964-66) suggested the following objectives for reforms in education
(i) Employability of education
(ii) Achieve Social and National Integration
(iii) Accelerate the process of modernization
(iv) Cultivate social, moral and spiritual values
Which of the above are correct?

a. (i), (iii), (iv) **b. (ii), (iii), (iv)** c. (i), (ii), (iv)
d. (i), (ii), (iii) e. Answer not known

கல்வியில் சீர்திருத்தங்களுக்கான பின்வரும் நோக்கங்களை கோத்தரி ஆணையம் (1964-66) பதிவு செய்தது.

(i) வேலைவாய்ப்பிற்கான கல்வி
(ii) சமூக மற்றும் தேசிய ஒருங்கிணைப்பை அடைதல்
(iii) நவீனமயமாக்கல் செயல்முறைகளை துரிதப்படுத்துதல்
(iv) சமூக, தார்மீக மற்றும் ஆன்மிக மதிப்பீடுகளை வளர்ப்பது

மேற்கண்டவற்றில் எவை சரியானவை?

a. (i), (iii), (iv) **b. (ii), (iii), (iv)** c. (i), (ii), (iv)
d. (i), (ii), (iii) e. விடை தெரியவில்லை

23. 2019, Sahitya Akademi Award was won by Cho Dharman for his book ____ which talks about the importance of ____.

**a. Sool, 'Water bodies'**
b. Koogai, 'Caste less ness society'
c. Dhoorvai, 'Modernization and industrialization impact'
d. Marundhu, 'Story teller's feeling'
e. Answer not known

சோ தர்மனின் _______ நூல், ______ யின் முக்கியத்துவம் பற்றி பேசியது, அந்நூலிற்காக அவர் 2019 ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதினை வென்றார்.

a. சூல், 'நீர்நிலைகள்'
b. கூகை, 'சாதி அற்ற சமூகம்'
c. தூர்வை, 'நவீனம், தொழில்மயமாதலின் தாக்கம்'
d. மருந்து, 'கதை சொல்லியின் உணர்வுகள்'
e. விடை தெரியவில்லை

24. Jai Shakthi Abiyan launched with the objectives:

(i) to capture rain water
(ii) to enhance the quality of school education
(iii) to extend the creamy norms to economic backwardness
(iv) for building recharge wells
(v) to include the excluded
(vi) to increase the enrollment ratio

a. (ii), (vi) correct **b. (i), (iv) correct** c. (iii), (v) correct
d. (ii), (v), (vi) correct e. Answer not known

ஜெய் சக்தி அபியன் தொடங்கப்பட்ட குறிக்கோள்கள்

(i) மழை நீர் சேகரிப்பு
(ii) பள்ளி கல்வியின் தரத்தினை மேம்படுத்த
(iii) கிரீமி விதிமுறைகளை பொருளாதார பின்தங்கிய நிலைக்கு விரிவுபடுத்துதல்
(iv) மீள்நிரப்பு கிணறுகள் கட்டுதல்
(v) விளக்கப்பட்டவர்களையும் சேர்க்க வேண்டும்
(vi) மாணவர் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க

a. (ii), (vi) சரி b. (i), (iv) சரி c. (iii), (v) சரி
d. (ii), (v), (vi) சரி e. விடை தெரியவில்லை

25. Select the variable which is not included in the calculation of composite HDI in UNDP:

a. Adjusted real GDP per capita (PPP) **b. A deprivation index**
c. Life expectancy index d. Educational attainment index
e. Answer not known

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDP) ஒருங்கிணைந்த மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (Composite HDI) கணக்கீட்டில் சேர்க்கப்படாத மாறிலியை தேர்வு செய்க.

a. சரிசெய்யப்பட்ட உண்மை மொத்த உள்நாட்டு தலா உற்பத்தி (PPP) வாங்குதறின் சமநிலை
b. (மோசடி) இழப்பு குறியீடு
c. ஆயுள் எதிர்பார்ப்பு குறியீடு
d. கல்வி அடைதல் குறியீடு
e. விடை தெரியவில்லை

26. If 1 + 2 + 3 + … + k = 325 then find the value of $1^3 + 2^3 + 3^3 + \ldots + k^3$

a. 103425 b. 105605 **c. 105625** d. 106625 e. Answer not known

1 + 2 + 3 + … + k = 325 எனில் $1^3 + 2^3 + 3^3 + \ldots + k^3$ இன் மதிப்பு காண்க?

a. 103425 b. 105605 **c. 105625** d. 106625 e. விடை தெரியவில்லை

27. In a flower bed, there are 23 rose plants in the first row, 21 in the second, 19 in the third, and so on. There are 5 rose plants in the last row. How many rows are there in the flower bed?

**a. 10** b. 12 c. 13 d. 15 e. Answer not known

ஒரு மலர் படுக்கையில், முதல் வரிசையில் 23 ரோஜாப்பூ செடிகளும், 2 வது வரிசையில் 21ம், 3 வது வரிசையில் 19 ம், கடைசி வரிசையில் 5 பூச்செடிகளும் உள்ளன எனில் மொத்த வரிசைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

a. 10 b. 12 c. 13 d. 15 e. விடை தெரியவில்லை

28. Find $x$ such that $3^{x+2} = 3^x + 216$

**a. 3** b. 4 c. 5 d. 6 e. Answer not known

$x$-ன் மதிப்பு காண்க: $3^{x+2} = 3^x + 216$

a. 3 b. 4 c. 5 d. 6 e. விடை தெரியவில்லை

29. Arrange the digits of each of the given numbers in ascending order and find the smallest. 435, 876, 923, 574

a. 435 b. 876 **c. 923** d. 574 e. Answer not known

கொடுக்கப்பட்டுள்ள எண்களின் இலக்கங்களை ஏறுவரிசையில் அமைத்து அவற்றில் சிறிய எண்ணை காண்க.

a. 435 b. 876 **c. 923** d. 574 e. விடை தெரியவில்லை

30. The algebraic statement for 5 less to 2 times 'p'

a. 5p – 2 **b. 2p – 5** c. 2 – 5p
d. 5 – 2p e. Answer not known

'p' ன் 2 மடங்கில் 5 குறைவு என்பதற்கான இயற்கணித கூற்று.

a. 5p – 2 b. 2p – 5 c. 2 – 5p
d. 5 – 2p e. விடை தெரியவில்லை

31. In a survey of university students 64 had taken mathematics course, 94 had taken computer science course, 28 had the mathematics and physics, 26 had taken mathematics and computer science, 22 had taken computer science and physics course and 14 had taken all the three courses. Then the number of students who had taken one course only is

a. 216 b. 154 c. 140 **d. 106** e. Answer not known

பல்கலைக்கழக மாணவர்களின் கணக்கெடுப்பில் 64 பேர் கணிதம், 94 பேர் கணிப்பொறி அறிவியல், 58 பேர் இயற்பியல் ஆகிய பாடங்களைக் கற்கின்றனர். 28 பேர் கணிதமும் இயற்பியலும், 26 பேர் கணிதமும் கணிப்பொறி அறிவியலும் 22 பேர் கணிப்பொறி அறிவியலும் இயற்பியலும் மற்றும் 14

பேர் மூன்று பாடங்களையும் கற்கின்றனர். கணக்கெடுப்பில் கலந்துக் கொண்ட மாணவர்களில் ஒரு பாடத்தை மட்டும் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை _______ ஆகும்.

a. 216 b. 154 c. 140 **d. 106** e. விடை தெரியவில்லை

32. Two coins are tossed together. What is the probability of getting different faces on the coins?

**a. 1/2** b. 1/6 c. 2/3 d. 1/3 e. Answer not known

இரண்டு நாணயங்கள் ஒன்றாக சுண்டப்படும் பொழுது இரண்டிலும் வெவ்வேறு முகங்கள் கிடைக்க நிகழ்தகவு காண்.

a. 1/2 b. 1/6 c. 2/3 d. 1/3 e. விடை தெரியவில்லை

33. In class VIII, a math club has four members M, A, T and H. Find the number of different ways, the club can elect.

(i) A leader

(ii) A leader and an assistant leader

a. 12, 8 **b. 4, 12** c. 4, 16 d. 12, 4 e. Answer not known

எட்டாம் வகுப்பில் உள்ள ஒரு கணித மன்றத்தில் M, A, T மற்றும் H என்ற நான்கு உறுப்பினர்கள் உள்ளனர் எனில் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(i) கணித மன்றத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் யாவை?

(ii) கணித மன்றத்தலைவர் மற்றும் உபதலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் யாவை?

a. 12, 8 **b. 4, 12** c. 4, 16 d. 12, 4 e. விடை தெரியவில்லை

34. If 30 men can reap a field in 15 days, then in how many days can 20 men reap the same field?

a. 10 b. 12 c. 15 **d. 22.5** e. Answer not known

30 நபர்கள் ஒரு வயலை 15 நாட்களில் அறுவடை செய்கிறார்கள் எனில் 20 நபர்கள் எத்தனை நாட்களில் அவ்வயலை அறுவடை செய்வார்கள்?

a. 10 b. 12 c. 15 d. 22.5 e. விடை தெரியவில்லை

35. 60 workers can spin a bale of cotton in 7 days. In how many days will 42 workers spin it?

**a. 10** b. 15 c. 20 d. 25 e. Answer not known

60 பேர் ஒரு மூட்டை பருத்தியை 7 நாட்களில் சுற்ற முடியும். அதே வேலையை 42 பேர் எத்தனை நாட்களில் சுற்ற முடியும்?

**a. 10** b. 15 c. 20 d. 25 e. விடை தெரியவில்லை

36. X, Y and Z can do a piece of job in 4, 6 and 10 days respectively. If X, Y and Z work together to complete, then find their separate shares if they will be paid Rs. 3,100 for completing the job.

a. 1000 : 1500 : 600 b. 1500 : 600 : 1000 **c. 1500 : 1000 : 600**

d. 600 : 1000 : 1500 e. Answer not known

X, Y மற்றும் Z ஆகியோர் ஒரு வேலையை முறையே 4, 6, 10 நாட்களில் முடிப்பர். X, Y மற்றும் Z ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து அந்த வேலையை முடித்தால், அதற்காக அவர்களுக்கு Rs. 3,100 வழங்கப்படும் எனில் அவர்கள் தனித்தனியே பெறும் பங்குகளைக் காண்க.

a. 1000 : 1500 : 600 b. 1500 : 600 : 1000 **c. 1500 : 1000 : 600**

d. 600 : 1000 : 1500 e. விடை தெரியவில்லை

37. The volume of cylinder is $448\pi$ cubic. c.m. and the height is 7 cm. Find its lateral surface area?

a. 352 $\pi$ c.m$^2$ **b. 112 $\pi$ c.m$^2$** c. 128 $\pi$ c.m$^2$

d. 240 $\pi$ c.m$^2$ e. Answer not known

ஒரு உருளையின் கனஅளவு 448π க.செ.மீ அதன் உயரம் 7 செ.மீ. எனில் உருளையின் வளைபரப்பு காண்க.

a. 352 π செ.மீ $^2$ b. 112 π செ.மீ $^2$ c. 128 π செ.மீ $^2$
d. 240 π செ.மீ $^2$ e. விடை தெரியவில்லை

38. Find the volume of a cylinder whose height is 2 m and whose base area is 250 m$^2$

a. 300 m$^3$ b. 250 m$^3$ **c. 500 m$^3$** d. 400 m$^3$ e. Answer not known

உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 ச.மீ. கொண்ட ஓர் உருளையின் கனஅளவைக் காண்க.

a. 300 க.மீ.$^3$ b. 250 க.மீ.$^3$ c. 500 க.மீ.$^3$ d. 400 க.மீ.$^3$ e. விடை தெரியவில்லை

39. The present height of a tree is 847 cm. Find its height two years ago if it is increase at 10% p.a.

a. 400 cm b. 800 cm c. 500 cm **d. 700 cm** e. Answer not known

ஓர் மரத்தின் தற்போதைய உயரம் 847 செ.மீ. அது ஆண்டுக்கு 10% வீதம் வளர்கிறது எனில் 2 ஆண்டுகளுக்கு முன் அதன் உயரம் என்ன?

a. 400 செ.மீ. b. 800 செ.மீ. c. 500 செ.மீ. **d. 700** செ.மீ. e. விடை தெரியவில்லை

40. Find the rate of compound interest at which a principal becomes 1.69 times itself in 2 years?

a. 69% b. 60% **c. 30%** d. 3% e. Answer not known

ஓர் அசலானது கூட்டு வட்டி முறையில் 2 ஆண்டுகளில் அதைப்போன்று 1.69 மடங்கு ஆகிறது எனில், வட்டி வீதத்தைக் காண்க.

a. 69% b. 60% **c. 30%** d. 3% e. விடை தெரியவில்லை

41. What will be the simple interest earned on an amount of Rs. 16,800 in 9 months at the rate of $6\frac{1}{4}$% p.a.?

**a. Rs. 787.50** b. Rs. 812.50 c. Rs. 860
d. Rs. 887.50 e. Answer not known

Rs. 16,800 தொகைக்கு ஆண்டிற்கு $6\frac{1}{4}$% வட்டி வீதம் 9 மாதங்களுக்கான தனிவட்டி யாது?

a. Rs. 787.50 b. Rs. 812.50 c. Rs. 860
d. Rs. 887.50 e. விடை தெரியவில்லை

42. In what time will Rs. 5,600 amount to Rs. 6,720 at 6% per annum?

**a. $3\frac{1}{3}$ years** b. 3 years c. $2\frac{1}{2}$ years
d. 2 years e. Answer not known

எத்தனை ஆண்டுகளில் Rs. 5,600 ஆண்டுக்கு 6% தனிவட்டி வீதத்தில் Rs. 6,720 ஆக உயரும்.

**a. $3\frac{1}{3}$ years** b. 3 years c. $2\frac{1}{2}$ years
d. 2 years e. விடை தெரியவில்லை

43. An aircraft can accommodate 280 people in 2 trips. It can take ____ trips to take 1400 people.

a. 8 **b. 10** c. 9 d. 12 e. Answer not known

280 நபர்கள் ஒரு விமானத்தில் 2 முறை பயணம் செய்கின்றனர் எனில் அவ்விமானத்தில் 1400 நபர்கள் _____ முறை பயணம் செய்யலாம்.

a. 8 **b. 10** c. 9 d. 12 e. விடை தெரியவில்லை

44. A farmer has enough food for 144 ducks for 28 days. If he sells 32 ducks, how long will the food last?

**a. 36** b. 72 c. 38 d. 27 e. Answer not known

ஒரு விவசாயிடம் 144 வாத்துக்களுக்கு 28 நாட்களுக்குத் தேவையான உணவு உள்ளது. அவர் 32 வாத்துகளை விற்றுவிட்டார். எனில் அவரிடம் உள்ள உணவு மீதமுள்ள எத்தனை நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும்?

**a. 36** b. 72 c. 38 d. 27 e. விடை தெரியவில்லை

45. LCM of $x^3+1, x^2-1, (x+1)^2$

a. $(x+1)^2$ b. $(x-1)(x^2+x+1)$ c. $(x+1)^2 (x-1)^2 (x^2-x+1)$

**d. $(x+1)^2 (x-1)(x^2-x+1)$** e. Answer not known

$x^3+1, x^2-1, (x+1)^2$ இவற்றின் மீ.பொ.ம. ன் மதிப்பு

a. $(x+1)^2$ b. $(x-1)(x^2+x+1)$ c. $(x+1)^2 (x-1)^2 (x^2-x+1)$

d. $(x+1)^2 (x-1)(x^2-x+1)$ e. விடை தெரியவில்லை

46. The H.C.F. of two numbers is 8. Which one of the following can never be their LCM.

a. 24 b. 48 c. 56 **d. 60** e. Answer not known

இரு எண்களின் மீ.பொ.வ (H.C.F) 8 எனில் பின்வரும் எண்களில் எது அவ்விரு எண்களின் மீ.பொ.ம (LCM) ஆக இருக்க முடியாது.

a. 24 b. 48 c. 56 **d. 60** e. விடை தெரியவில்லை

47. Find the highest common factor (HCF) $16x^3y^2, 24xy^3z$.

a. $24xy^3z$ b. $48xy^2$ c. $16xy^2z$ **d. $8xy^2$** e. Answer not known

மீப்பெரு பொது வகு எண் (மீ.பொ.வ) காண்க $16x^3y^2, 24xy^3z$.

a. $24xy^3z$ b. $48xy^2$ c. $16xy^2z$ **d. $8xy^2$** e. விடை தெரியவில்லை

48. Find the HCF of 396, 504, 636.

a. 1 b. 6 **c. 12** d. 24 e. Answer not known

396, 504, 636 இன் மீ.பொ.வ காண்க.

a. 1 b. 6 c. 12 d. 24 e. விடை தெரியவில்லை

49. A cloth shrinks 0.5% when washed what fraction is this?

a. $\frac{1}{5}$ b. $\frac{1}{20}$ c. $\frac{1}{50}$ **d. $\frac{1}{200}$** e. Answer not known

ஒரு துணி சலவை செய்யப்படும்போது 0.5% சுருங்குகிறது எனில் இதனை பின்னத்தில் குறிப்பிடுக.

a. $\frac{1}{5}$ b. $\frac{1}{20}$ c. $\frac{1}{50}$ **d. $\frac{1}{200}$** e. விடை தெரியவில்லை

50. Find the value of $\sqrt{27}+\sqrt{12}$.

a. $\sqrt{39}$ b. $5\sqrt{6}$ **c. $5\sqrt{3}$** d. $3\sqrt{5}$ e. Answer not known

மதிப்பு காண் : $\sqrt{27}+\sqrt{12}$.

a. $\sqrt{39}$ b. $5\sqrt{6}$ **c. $5\sqrt{3}$** d. $3\sqrt{5}$ e. விடை தெரியவில்லை

51. Which among the following chemical is mixed with LPG (Liquifies Petroleum Gas) in LPG cylinders?

a. Sulphur dioxide **b. Ethyl Mercaptan** c. Mercapto ethanol

d. Nitrogen dioxide e. Answer not known

பின்வருவனவற்றுள் எந்த வேதிப் பொருளானது சமையல் எரிவாயு (LPG) உருளைகளில் அடைக்கப்படும் எரிவாயுவில் சேர்க்கப்படுகின்றது?

a. கந்தக டை ஆக்ஸைடு b. எத்தில் மெர்காப்டன் c. மெர்காப்டோ எத்தனால்

d. நைட்ரஜன் டை ஆக்ஸைடு e. விடை தெரியவில்லை

52. Assertion [A]: Atmospheric turbulence is characterised by different size eddies.
Reason [R]: Eddies are primarily responsible for diluting and transporting the pollutants injected into the atmosphere.
**a. Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]**
b. Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]
c. [A] is true, but [R] is false
d. [A] is false but [R] is true
e. Answer not known
கூற்று [A]: வளிமண்டலச் சுழற்சி பல்வேறு அளவுகளினால் ஆன காற்றுச்சுழிகளால் வகைப்படுத்தப்படும்.
காரணம் [R]: வளிமண்டலத்தில் மாசுக்களைக் கரைப்பதிலும் கடத்துவதிலும் வளிமண்டலக் காற்றுச் சுழிகள் முதன்மைப் பங்கு வகுக்கின்றன.
a. [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R] என்பது [A]-விற்கான சரியான விளக்கமாகும்.
b. [A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [A] என்பது [A]-விற்கான சரியான விளக்கமல்ல
c. [A] சரி; ஆனால் [R] தவறு
d. [A] தவறு, ஆனால் [R] சரி
e. விடை தெரியவில்லை

53. The lowest category in Taxonomic hierarchy is
a. Kingdom
b. Family
c. Genus
**d. Species**
e. Answer not known
வகைப்பாட்டியலின் படிநிலையில் கீழ்நிலையில் உள்ள அலகு யாது?
a. உலகம்
b. குடும்பம்
c. பேரினம்
d. சிற்றினம்
e. விடை தெரியவில்லை

54. Kala azar is caused by
a. Leishmania tropica
**b. Leishmania donovani**
c. Leishmania brasiliensis
d. Trypanosoma cruzi
e. Answer not known
காலா அசார்/கருங்காய்ச்சல் கீழ்கண்டவற்றுள் எவற்றால் உண்டாகின்றது?
a. லீஸ்மேனியா ட்ராபிகா
b. லீஸ்மேனியா டோனாவானி
c. லீஸ்மேனியா பிரேசிலியன்ஸிஸ்
d. ட்ரிப்னோசோமா குருசி
e. விடை தெரியவில்லை

55. Which one of the following is not a Lewis acid?
a. $BF_3$ **b. $NH_3$** c. $AlCl_3$ d. $BH_3$ e. Answer not known
பின்வருவனவற்றில் எது லூயிஸ் அமிலம் இல்லை?
a. $BF_3$ **b. $NH_3$** c. $AlCl_3$ d. $BH_3$ e. விடை தெரியவில்லை

56. Assertion [A]: A good fertilizer should be basic.
Reason [R]: Slightly basic soil is must for proper growth of plants.
a. [A] is false; [R] is true
**b. [A] is true; [R] is true**
c. [A] is true; [R] is false
d. Both [A] and [R] are false
e. Answer not known
கூற்று [A]: நல்ல உரம் காரத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.
காரணம் [R]: சிறிது காரத்தன்மை கொண்ட மண், தாவரங்களின் வளர்ச்சிக்குக் கட்டாயம் தேவை.
a. [A] என்பது தவறு [R] என்பது சரி
b. [A] என்பது சரி [R] என்பது சரி

c. [A] என்பது சரி [R] என்பது தவறு
d. [A] மற்றும் [R] இரண்டும் தவறு
e. விடை தெரியவில்லை

57. A man ate 100 grapes in 5 days. Each day he ate 6 more grapes than those he ate on the earlier days. How many grapes did he eat on the first day?
**a. 8** b. 12 c. 54 d. 76 e. Answer not known
ஒரு மனிதன் 5 நாட்களின் 100 திராட்சைகளை சாப்பிட்டான். ஒவ்வொர நாளும் அவன் முந்தைய நாட்களில் சாப்பிட்டதை விட 6 திராட்சைகளைக் கூடுதலாக சாப்பிடுவதாக வைத்துக்கொண்டால், முதல் நாளில் எத்தனை திராட்சைகளைச் சாப்பிட்டான்?
**a. 8** b. 12 c. 54 d. 76 e. விடை தெரியவில்லை

58. ____ and ___ bands are used for transmission of TV programmes.
a. THF, VHF b. THF, UHF c. SHF, VHF
**d. VHF, UHF** e. Answer not known
______ மற்றும் ______ அலைவரிசையில் TV நிகழ்ச்சிகள் ஒளிபரப்பபடுகிறது.
a. THF, VHF b. THF, UHF c. SHF, VHF
d. VHF, UHF e. விடை தெரியவில்லை

59. Name the network project of the Indian Council of Agriculture Research (ICAR) that aims to enhance the resilience of Indian Agricultural to climate change through strategic research and technology demonstratican is
a. ICMSR b. ICRISAT **c. NICRA**
d. CDRI e. Answer not known
இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகமானது (ICAR) இந்திய வேளாண்மையை காலநிலை மாறுபாடுகள் போன்ற காரணிகளிலிருந்து மீட்டெடுப்பதற்காக நிலையான ஆய்வு, செயல்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தியுள்ள தொடர் திட்டமானது.
a. ICMSR b. ICRISAT c. NICRA
d. CDRI e. விடை தெரியவில்லை

60. In which state of India Tulip flower festival is being celebrated?
a. Himachal Pradesh **b. Jammu-Kashmir** c. Kerala
d. Manipur e. Answer not known
இந்தியாவின் எந்த மாநிலத்தில் துலிப் மலர்த்திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது?
a. ஹிமாச்சலப் பிரதேசம் b. ஜம்மு-காஷ்மீர் c. கேரளா
d. மணிப்பூர் e. விடை தெரியவில்லை

61. Match correctly the specific species conservation projects with their corresponding places:
A. Project Cheetah 1. Barda Wildlife Sanctuary
B. Project Sanjeevani 2. Desert National Park
C. Project Lion 3. Kuno National Park
D. Project Great Indian Bustard 4. Himachal Pradesh

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| **b.** | **3** | **4** | **1** | **2** |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. Answer not known

குறிப்பிட்ட இனங்களின் பாதுகாப்புத் திட்டங்களை அவற்றிற்குத் தொடர்புடைய இடங்களுடன் சரியாகப் பொருத்தவும்:

A. சிறுத்தை திட்டம் — 1. பர்தா வனவிலங்கு சரணாலயம்
B. சஞ்சீவனி திட்டம் — 2. பாலைவன தேசியப் பூங்கா
C. சிங்கம் திட்டம் — 3. குனோ தேசியப் பூங்கா
D. கானமயில் திட்டம் — 4. இமாச்சலப் பிரதேசம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 3 | 1 |
| **b.** | **3** | **4** | **1** | **2** |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

62. In order to get the status of registered political party, all political parties have to conduct periodic and regular election to all positions of office-bearers and organs of the party at least once in

**a. 4 years** b. 5 years c. 8 years
d. 10 years e. Answer not known

இந்திய தேர்தல் ஆணையத்திடம் பதிவுரிமை பெற்ற அரசியல் கட்சி எனும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு அரசியல் கட்சியும் கட்சியின் அனைத்து மட்டப் பொறுப்பாளர்களுக்கானத் தேர்தலைத் தொடர்ச்சியாகத் தவறாமல் குறைந்தது எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது நடத்த வேண்டும்.

a. 4 ஆண்டுகள் b. 5 ஆண்டுகள் c. 8 ஆண்டுகள்
d. 10 ஆண்டுகள் e. விடை தெரியவில்லை

63. The Central Government is the provide free food grains to under the National Food Security Act in the total number of beneficiaries in January – 2023

**a. 81.35 crore** b. 80.50 crore c. 100 crore
d. 90.60 crore e. Answer not known

2023, ஜனவரியில் மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இலவச உணவு தானியங்களை மத்திய அரசு வழங்கியது

a. 81.35 கோடி b. 80.50 கோடி c. 100 கோடி
d. 90.60 கோடி e. விடை தெரியவில்லை

64. Which of the following is NOT found in Indian Navy's new ensign 'Nishaan'?

a. Royal Seal of Chhatrapathi Sivaji b. National flag
c. National Emblem **d. St. George's Cross**
e. Answer not known

பின்வருவனவற்றுள் எது இந்திய கடற்படையின் புதிய அடையாளச்சின்னமான நிஷானில் காணப்படவில்லை?

a. சத்ரபதி சிவாஜியின் ராஜமுத்திரை b. தேசியக் கொடி c. தேசியச் சின்னம்
d. புனித ஜார்ஜ் சிலுவை e. விடை தெரியவில்லை

65. _____ intended to support women affected by violence, in private and public spaces, within the family, community and at the work place.

a. Community Centre **b. One stop crisis centre**
c. Short stay home d. Shelter home
e. Answer not known

_____ வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தனியார் மற்றும் பொது இடங்களில் குடும்பம், சமூகம் மற்றும் பணியிடத்தில் ஆதரவளிக்கும் நோக்கம் கொண்டது.

a. சமூக மையம் b. ஒரு நிறுத்த நெருக்கடி மையம்

c. குறுகிய தங்கும் வீடு d. தங்குமிடம்
e. விடை தெரியவில்லை

66. Who modified the climatic divisions of Stamp and Kendrew on the basis of variations in the temperature?
a. Koppen W **b. Singh R.L.** c. Thornthuwaite C.W.
d. Trewartha G.T. e. Answer not known
கென்ட்ரூ மற்றும் ஸ்டாம்ப் அவர்களின் காலநிலை வகைபாட்டை வெப்பநிலை வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு மாற்றியமைத்தவர் யார்?
a. கோப்பன் W b. சிங் R.L. c. தாந்துவைத் C.W.
d. திரிவார்த்தா G.T. e. விடை தெரியவில்லை

67. Which one of the following development strategy is used for the Minimum Need Programme?
a. Nagpur Plan b. Twenty – Year Road Plan **c. Rural Development**
d. Central Road Fund e. Answer not known
குறைந்தபட்ச தேவை திட்டத்திற்கு பின்வரும் வளர்ச்சி உத்திகளில் ஒன்று பயன்படுத்தப்படுகிறது
a. நாக்பூர் திட்டம் b. இருபது ஆண்டு சாலைத் திட்டம்
c. கிராம வளர்ச்சித் திட்டம் d. மத்திய சாலை நிதி
e. விடை தெரியவில்லை

68. Which type of forests are found in the deltas of Mahanadi, Godavari and Krishna rivers?
**a. Mangrove forests** b. Coastal forests c. Alpine forests
d. Reverine forest e. Answer not known
மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் கழிமுகங்களில் காணப்படும் காடுகளின் வகை எது?
a. சதுப்புநில காடுகள் b. கடலோர காடுகள் c. ஆல்பைன் காடுகள்
d. நதி காடுகள் e. விடை தெரியவில்லை

69. Which river flows towards the west in India?
a. Sindhu b. Ganga **c. Narmadha** d. Cauvery e. Answer not known
இந்தியாவில் எந்த ஆறு மேற்கு நோக்கிப் பாய்கின்றது?
a. சிந்து b. கங்கா c. நர்மதா c. காவேரி e. விடை தெரியவில்லை

70. Non-renewable sources of energy and renewable sources of energy come under the ministry of
a. Non-Convention Energy, India
**b. Environment, Forest and Climate change (GOI)**
c. Coal and Petroleum, India
d. Conventional energy, India
e. Answer not known
(மரபுசாரா) புதுப்பிக்கப்பட்ட ஆற்றல் மற்றும் புதுபிக்கயியலாத (மரபுசார்) ஆற்றல் வளங்கள் எந்த அமைச்சகத்தின் கீழ்வரும்?
a. மரபுசாரா ஆற்றல், இந்தியா
b. சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் - இந்திய அரசு
c. நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் இந்தியா
d. மரபுசார் ஆற்றல் - இந்தியா
e. விடை தெரியவில்லை

71. During the rule of the Khalji dynasty, the merchants had to bring all their goods for sale to

**a. Sarai-e-Adl** b. Karkhana c. Kotwal

d. Iqta e. Answer not known

கில்ஜி வம்ச ஆட்சியில் வணிகர்கள் தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களை _____ இடத்திற்கு கொண்டு வரவேண்டும்.

a. ஸராய் அடில் b. கர்கானா c. கொத்வால்

d. இக்தா e. விடை தெரியவில்லை

72. ____ the ruler of Vijayangar constructed a huge dam on the river Tungabhadra.

a. Harihara – II **b. Bukka – II** c. Virupaksa – II

d. Devaraya – II e. Answer not known

______, விஜய நகர மன்னர் ஆட்சியில் துங்கபத்ரா ஆற்றில் ஒரு பெரிய அணையைக் கட்டினார்.

a. இரண்டாம் ஹரிஹரா b. இரண்டாம் புக்கர் c. இரண்டாம் விருபாக்ஷா

d. இரண்டாம் தேவராயா e. விடை தெரியவில்லை

73. Which of the following is true about the finance and revenue system under Shivaji?

(i) The Chauth and the Sardeshmukhi

(ii) Village officials were Deshmuks and Patil's

(iii) The Revenue Officer appointed by Shivaji was called Karkuns

a. (i) only b. (i) and (iii) only **c. (i) and (ii) only**

d. (ii) and (iii) only e. Answer not known

சிவாஜியின் கீழ் உள்ள நிதி மற்றும் வருவாய் அமைப்புகளில் பின்வருவனவற்றில் எது உண்மை?

(i) சௌத் மற்றும் சர்தேஷ்முகி

(ii) தேஷ்முக் மற்றும் பாட்டீல்கள் கிராம அதிகாரிகள்

(iii) சிவாஜியினால் நியமிக்கப்பட்ட வருவாய் அதிகாரிக்கு கற்குன், என்று பெயர்

a. (i) மட்டுமே b. (i) மற்றும் (iii) மட்டுமே c. (i) மற்றும் (ii) மட்டுமே

d. (ii) மற்றும் (iii) மட்டுமே e. விடை தெரியவில்லை

74. Which of the following are correctly paired?

1. Abul Qasim Khan Namkin – Munshat-i-Namkin
2. Inayatullah Khan – Kalimat–i–Tayyakat
3. Muhammed Sadiq – Nigarnama-i-Munshi
4. Malikzada – Adam-i-Alamgiri

**a. 1 and 2 are correct** b. 1 and 3 are correct c. 2 and 4 are correct

d. 3 and 4 are correct e. Answer not known

பின்வருவனவற்றுள் சரியாகப் பொருத்தப்பட்டவை எவை?

1. அபுல் காசிம்கான் நம்கின் - முன்ஷாத்-இ-நம்கின்
2. இணயத்துல்லா கான் - கலிமத்-இ-தையாகத்
3. முகம்மது சாதிக் - நிகர்நாமா-இ-முன்ஷி
4. மாலிக்ஜடா – ஆடம்-இ-ஆலம்கிரி

a. 1 மற்றும் 2 சரி b. 1 மற்றும் 3 சரி c. 2 மற்றும் 4 சரி

d. 3 மற்றும் 4 சரி e. விடை தெரியவில்லை

75. On behalf of Mughal Emperor Aurangzeb who signed the treaty of Purandhar with Shivaji?

a. Mansingh **b. Jai Singh** c. Shaista Khan

d. Afzal Khan e. Answer not known

முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பிற்கு பதிலாக புரந்தர் உடன்படிக்கையில் சிவாஜியோடு கையெழுத்திட்டது யார்?

a. மான்சிங் b. ஜெய்சிங் c. ஷயிஸ்தா கான்

d. அ..ப்ஸல் கான் e. விடை தெரியவில்லை

76. In A.D. 1891, the Dravida Mahajana Sabha was founded and organized its first conference at

a. Madurai b. Salem **c. Nilgiris**
d. Chengalpattu e. Answer not known

கி.பி. 1891 இல் நிறுவப்பட்ட திராவிட மகாஜன சபை அதன் முதல் மாநாட்டை _____ல் நடத்தியது.

a. மதுரை b. சேலம் c. நீலகிரி
d. செங்கல்பட்டு e. விடை தெரியவில்லை

77. Which of the following statements is true about the Vijayanagar Empire?

(i) Sea Trade was ignored
(ii) The Famous Persian Ambassador Abdur Razzaq was invited by Devarayar II
(iii) Vijayanagar Kingdom was founded by Harihara I
(iv) Vijayanagar forces were defeated by Bahmani armies

a. (ii) and (iv) b. (i) and (ii) **c. (ii) and (iii)**
d. (i) and (iv) e. Answer not known

விஜயநகரப் பேரரசு பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

(i) கடல் வர்த்தகம் புறக்கணிக்கப்பட்டது.
(ii) புகழ்பெற்ற பெர்சியன் தூதுவர் அப்துல் ரசாக்கை இரண்டாம் தேவராயர் தனது அரசபைக்கு அழைத்தார்
(iii) விஜயநகரப் பேரரசு முதலாம் ஹரிஹரரால் நிறுவப்பட்டது.

a. (ii) மற்றும் (iv) b. (i) மற்றும் (ii) c. (ii) மற்றும் (iii)
d. (i) மற்றும் (iv) e. விடை தெரியவில்லை

78. Point out the wrong statement of the following:

I. The Indus Seals have not been deciphered so far.
II. Indus civilization was a notable urban culture.
III. Indus people used large number of weights.
IV. Indus people knew the art of using the metal iron.

a. I b. II c. III **d. IV** e. Answer not known

பின்வருவனவற்றுள் தவறான கருத்தை குறிப்பிடுக:

I. சிந்து முத்திரைகள் இதுவரை முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை
II. சிந்து சமவெளி நாகரிகம் ஒரு குறிப்பிடத்தக்க நகர கலாச்சாரம் ஆகும்.
III. சிந்து சமவெளி மக்கள் அதிக அளவிலான அளவை முறைகளை பயன்படுத்தினர்.
IV. சிந்து சமவெளி மக்கள் இரும்பை பயன்படுத்தும் கலையை அறிந்திருந்தனர்.

a. I b. II c. III d. IV e. விடை தெரியவில்லை

79. Read the following passage and answer the item that follows. Your answers to this item should be based on the passage only:

Corruption in India is basically Politico-Administrative. It pervades both the political and the administrative levels in government. It runs deep, is well organized and systematic. Secondly it often emanates at the top political and administrative levels. This top level involvement makes it's eradication nearly impossible. According to the passage what is the reason for impossibility of eradication of corruption.

a. Corruption prevails in India
b. Corruption is found both in Administration and in politics
c. Corruption is systematic and deep rooted
**d. Corruption deeply rooted out the Higher Levels of the Administration and Politics**
e. Answer not known

அடிப்படையில் ஊழல் என்பது இந்தியாவின் அரசியல் நிர்வாகமாகத் தன்மையாகிவிட்டது. ஊழல் என்பது பல்வேறு படிநிலைகளிலும் ஒரு முறைப்படுத்தப்பட்ட தன்மையோடு அரசாங்கத்தின் நிர்வாகத்திலும் அரசியலிலும் மிக ஆழமாகப் பரவி விட்டது. இரண்டாவதாக இந்த ஊழல் என்பது மேல்மட்ட அரசியலிலும் நிர்வாகத்திலும் நிறைந்திருக்கிறது. இப்படி மேல் மட்டத்திலும் ஊழல் நிறைந்திருப்பதால் அதனை ஒழிப்பது நடைமுறை சாத்தியமில்லாத ஒன்றாகி விட்டது. மேல் உள்ள பத்தியின்படி, ஊழலை ஒழிப்பது முடியாத ஒன்றாக இருப்பதற்கான காரணம் என்ன?

a. ஊழல் இந்தியாவில் செயல்படுகிறது
b. ஊழல் நிர்வாகம் மற்றும் அரசியல் நிலைகளில் செயல்படுகிறது.
c. ஊழல் ஆழமாகவும் முறையாகவும் உள்ளது.
d. ஊழல் நிர்வாக மற்றும் அரசியல் மேல் நிலைகளில் ஆழமாது வேர் ஊன்றியுள்ளது
e. விடை தெரியவில்லை

80. Consider the following statements:
The concepts of "Separation of Power" and Independent Judiciary" were upheld by the Supreme Court in the case of

**a. State of Bihar Vs Bal Mukund, Sah** b. Minerva Mill Vs Union of India
c. Indira Gandhi Vs Raj Narain d. Dharward Employees Vs State of Karnataka
e. Answer not known

அதிகாரப் பிரிவினை மற்றும் சுதந்திரமான நீதித்துறை என்ற கருத்துக்களை உச்ச நீதிமன்றம் உயர்த்திப் பிடித்த வழக்கு.

a. பீகார் மாநில அரசு Vs பால் முகுந்து ஷா
b. மினர்வா மில் நிறுவனம் Vs இந்திய ஒன்றியம்
c. இந்திரா காந்தி Vs ராஜ் நாராயன்
d. தார்வாடு தொழிலாளர்கள் Vs கர்நாடக மாநில அரசு
e. விடை தெரியவில்லை

81. Who was the Chairman of the Second Commission on centre-state Relations?

**a. Madan Mohan Punchhi** b. R.S. Sarkaria c. Morarji Desai
d. P.V. Raja Mannar e. Answer not known

மத்திய-மாநில உறவுகளுக்கான இரண்டாவது குழுவின் தலைவர் யார்?

a. மதன் மோகன் பூன்சி b. ஆர்.எஸ். சர்க்காரியா c. மொரார்ஜி தேசாய்
d. பி.வி. ராஜமன்னார் e. விடை தெரியவில்லை

82. Choose the correct states from the following which have upper house in the State Legislature

**a. Bihar, U.P., Maharashtra, Jammu an Kashmir, Karnataka, Andrapradesh, Telangana**
b. Rajasthan, Hariyana, Assam, M.P., Kerala, Orissa
c. Gujarat, Nagaland, Punjab, West Bengal, Manipur
d. Tripura, Himachal Pradesh, Meghalaya, Sikkim, Mizoram
e. Answer not known

கீழ்வருவனவற்றுள் மாநில சட்டமன்றத்தில் மேலவையை கொண்டுள்ள மாநிலங்களை தெரிந்தெடுக.

a. பீகார், உத்திரபிரதேசம், மகாராஷ்டிரா, ஜம்மு மற்றும் காஷ்மீர், காந்நடகா, ஆந்திரபிரதேசம், தெலுங்கானா
b. ராஜஸ்தான், ஹரியானா, அசாம், மத்தியபிரதேசம், கேரளா, ஒரிசா
c. குஜராத், நாகாலாந்து, பஞ்சாப், மேற்கு வங்காளம், மணிப்பூர்
d. திரிபுரா, இமாச்சல பிரதேசம், மேகாலையா, சிக்கிம், மிசோரம்
e. விடை தெரியவில்லை

83. Who Presides over the joint sitting of the parliament?

**a. Speaker of the Lok Sabha** b. Deputy Speaker of the Lok Sabha

c. Chairman of the Rajya Sabha
d. President of India
e. Answer not known

நாடாளுமன்ற கூட்டு கூட்டத் தொடரை தலைமையேற்று நடத்துபவர் யார்?
a. மக்களவை சபா நாயகர்
b. மக்களவை துணை சபாநாயகர்
c. மாநிலங்களவை தலைவர்
d. இந்திய குடியரசுத் தலைவர்
e. விடை தெரியவில்லை

84. Which of the following Articles says that the Directive Principles cannot be enforceable by any court?
**a. Article 37**
b. Article 38
c. Article 39
d. Article 40
e. Answer not known

அரசு வழிகாட்டு நெறிமுறைகளை நீதிமன்றம் மூலம் செயல்படுத்த முடியாது என தெரிவிக்கும் அரசியலமைப்பு ஷரத்து யாது?
a. ஷரத்து 37
b. ஷரத்து 38
c. ஷரத்து 39
d. ஷரத்து 40
e. விடை தெரியவில்லை

85. In an Emergency the fundamental rights of citizens
a. May be suspended
**b. Stand automatically suspended**
c. Can be enjoyed approval of the Supreme Court
d. Can be enjoyed with the approval of the High Court
e. Answer not known

அவசர நிலையில் மக்களின் அடிப்படை உரிமைகள்
a. நிறுத்தி வைக்கப்படும்
b. தானாகவே நின்று விடும்
c. தலைமை நீதிமன்ற ஒப்புதலின் பேரில் அனுபவிக்கலாம்
d. உயர்நீதிமன்ற ஒப்புதலின் பேரின் அனுபவிக்கலாம்
e. விடை தெரியவில்லை

86. Assertion [A]: The Constituent Assembly was elected by indirect election by the members of the Provincial Legislative Assemblies.
Reason [R]: Members of each community in the Provincial Legislative Assemblies elect their representatives by the method of proportional representation by single transferable vote.

Choose the correct option from below:
a. [A] and [R] are true and [R] is the correct explanation for [A].
b. [A] is true but [R] is false
**c. [A] and [R] are true but [R] is not the correct explanation for [A]**
d. [A] is false and [R] is true
e. Answer not known

கூற்று [A]: அரசியல் சாசன நிர்ணய சபையை, மாநில சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கிறார்கள்.
காரணம் [R]: மாநில சட்ட மன்றத்தின் ஒவ்வொரு சமுதாயமும் தன் உறுப்பினர்களை ஒற்றை மாற்றத்தக்க விகிதாச்சார வாக்கு முறையில் தேர்வு செய்கிறார்கள்.

கீழ்கண்டவற்றில் சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:
a. [A] மற்றும் [R] சரி மற்றும் [R], [A]வின் சரியான காரணி தான்
b. [A] சரி ஆனால் [R] தவறு
c. [A] மற்றும் [R] சரி ஆனால் [R], [A]வின் சரியான காரணி அல்ல
d. [A] தவறு ஆனால் [R] சரி
e. விடை தெரியவில்லை

87. Which scheme was launched by the Government of India to connect more and more peoples from the banking services?

a. Make in India b. Skill India Mission c. PM Mudra Yojana

**d. PM Jan Dhan Yojana** e. Answer not known

வங்கி சேவையில் அதிகமானவர்களை இணைக்க இந்திய அரசு இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியது

a. மேக் இன் இந்தியா b. ஸ்கில் இந்தியா மிஷன்

c. பிரதான மந்திரி முத்ரா யோஜனா d. பிராதான மந்திரி ஜன் தன் யோஜனா

e. விடை தெரியவில்லை

88. Why the Reserve Bank of India is called the Lender of last resort?

(i) It private the currency notes

(ii) It mints the coin

(iii) At times of crisis, it is the only source capable of lending for commercial bank

(iv) At times of crisis, Banks lend to Reserve Bank

a. (i) and (ii) b. (iii) and (iv) **c. (iii) only**

d. (iv) only e. Answer not known

இந்திய ரிசர்வ் வங்கியினை ஏன் கடைசி நிலைக்கடன் ஈவோன் என அழைக்கிறோம்.

(i) காகித பணத்தை அச்சடித்தல்

(ii) நாணயங்களை அச்சடித்தல்

(iii) இக்கட்டான சூழலில், வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் மட்டுமே கடன் பெற இயலும்.

(iv) இக்கட்டான சூழலில், ரிஸர்வ் வங்கிக்கு வங்கிகள் கடன் வழங்குகின்றன.

a. (i) மற்றும் (ii) b. (iii) மற்றும் (iv) **c. (iii)** மட்டும்

d. (iv) மட்டும் e. விடை தெரியவில்லை

89. Which of the following is a Refinance Institution?

a. Life Insurance Corporation of India

b. Unit trust of India

**c. National Bank for Agriculture and Rural Development**

d. State Financial Corporation

e. Answer not known

இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் மறு நிதியாக்க நிறுவனங்கள் யாவை?

a. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்

b. இந்திய யூனிட் டிரஸ்ட்

c. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

d. மாநில நிதிக் கழகங்கள்

e. விடை தெரியவில்லை

90. Match the following:

A. Indirect tax 1. Canon of Elasticity

B. Bonds and Securities 2. Principle of Accountability

C. Direct tax 3. Custom duty

D. Federal Finance 4. Internal Public debt

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| **c.** | **3** | **4** | **1** | **2** |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. Answer not known

பின்வருவனவற்றை பொருத்துக:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A. மறைமுக வரி | | | | | 1. நெகிழும் தன்மை விதி |
| B. அரசு பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் | | | | | 2. பொறுப்பேற்பு |
| C. நேர்முக வரி | | | | | 3. சுங்க வரி |
| D. கூட்டமைப்பு நிதி | | | | | 4. உள்நாட்டு பொதுக்கடன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| **c.** | **3** | **4** | **1** | **2** |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

91. Which one of the following plan was used in Tenth Five Year Plan?
**a. Reform plan** b. Resource plan c. Rolling plan
d. National plan e. Answer not known
கீழே காணப்படும் திட்டங்களில் எந்த திட்டம் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் பயன்படுத்தப்பட்டது?
a. சீர்திருத்த திட்டம் b. வளத் திட்டம் c. சுழலும் திட்டம்
d. தேசிய திட்டம் e. விடை தெரியவில்லை

92. The source of non-tax revenue are
**a. Commercial Revenues and Public Administrative Revenues**
b. Income Tax and Corporate Income Tax
c. Death duty
d. Excise duty
e. Answer not known
வரிசாரா வருவாயின் ஆதாரங்களாவன
a. வணிக வருவாய் மற்றும் பொது துறை மேற்பார்வை வருவாய்
b. வருமான வரி மற்றும் பெருந் நிறுவனங்களின் வருமான வரி
c. மரண வரி
d. கலால் வரி
e. விடை தெரியவில்லை

93. "Public Private Partnership (PPP) model is emerging as a rule for future development of Infrastructure" – is the objective of
a. Finance Commission **b. Niti Aayog** c. Labour Commission
d. Planning Commission e. Answer not known
"எதிர்கால வளர்ச்சிக்கான கட்டமைப்புகளை பொதுத்துறை – தனியார் துறை இரண்டும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே வளர்ச்சி அடைய இயலும்" என்பது _____ நோக்கமாகும்.
a. நிதிக்குழு b. நிதி ஆயோக் c. தொழிலாளர் ஆணையம்
d. திட்டக்குழு e. விடை தெரியவில்லை

94. The theory of Pakistan was inspired by
a. Muhammad Ali Jinnah b. Sir Syed Ahamad Khan
**c. Muhamad Iqbal** d. Maulane Abdulkalam Azad
e. Answer not known
பாகிஸ்தான் பிரிவினை கோட்பாட்டை முதன் முதலில் கூறியவர்
a. முகமது அலி ஜின்னா b. சர் சையது அகமதுகான் c. முகம்மது இக்பால்
d. மௌலானா அபுல்கலாம் ஆசாத் e. விடை தெரியவில்லை

95. Match the following:

| | | |
|---|---|---|
| A. Chittagang Armed Ride | | 1. M.N. Roy |
| B. Kanpur Conspiracy case | | 2. Benjamin Bradley |
| C. Lahore Conspiracy case | | 3. Kalpana Datta |
| D. Meerut Conspiracy case | | 4. Bhagat Singh |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 1 | 2 | 4 | 3 |

e. Answer not known

பின்வருவனவற்றை பொருத்துக:

| | |
|---|---|
| A. சிட்டங் ஆயுதப் படைதாக்கு | 1. M.N. ராய் |
| B. கான்பூர் சதி வழக்கு | 2. பெஞ்சமின் ப்ராட்லி |
| C. லாகூர் சதி வழக்கு | 3. கல்பனா தத்தா |
| D. மீரட் சதி வழக்கு | 4. பகத்சிங் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 1 | 2 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

96. "With the death of Mr. Jawaharlal Nehru India and the whole mankind had lost an eminent statesmen who was held in esteem throughout the world as leader in the struggle for peace and international understanding". Who said this?

a. Dr. Radha Krishnan
b. Dwight D. Eisenhower
**c. Dr. Heinrich Lubake**
d. Duke of Devonshire
e. Answer not known

ஜவஹர்லாலின் இறப்பு இந்தியா மட்டுமல்லாது ஒட்டு மொத்த மனித சமுதாயம் ஓர் ஒப்பற்ற இராஜ தந்திரியை இழந்ததும் அவர் சுதந்திரத்திற்கான போராட்டத்திலும் மற்றும் உலகளாவிய புரிதலுக்காக பெரிதும் மதிக்கப்பட்டவர் என யார் கூறியது?

a. Dr. இராதா கிருஷ்ணன்
b. ட்விட் D. ஐஸ்னோவர்
c. Dr. ஹென்ரிக் லுபாக்
d. டேவோன்ஷயரின் கோமான்
e. விடை தெரியவில்லை

97. Which one of the following is the earliest organised labour agitation against British Government in India?

a. Champaran Movement
b. Mill Workers Strike at Ahmadabad
**c. The Coral Mill Strike**
d. The Kheda Struggle
e. Answer not known

கீழ்கண்டவற்றில் இந்தியாவில் ஆங்கில அரசிற்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்பட்ட தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தங்களில் ஒன்றாகும்.

a. சம்பரான் இயக்கம்
b. அகமதாபாத் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம்
c. கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம்
d. கேதா இயக்கம்
e. விடை தெரியவில்லை

98. "A day will drawn when the Indians will have to follow the Maharashtrian way for the regaining of freedom. They will have to copy the example of Great Shivaji". Who said it?

a. Bal Gangadar Tilak
b. C.R. Das
**c. Subash Chandra Bose**

d. Chandra Shekhar Azad e. Answer not known

"ஒரு நாள் பிறக்கும், இந்தியர்கள் தங்கள் சுதந்திரத்தை மீட்டெடுக்க மஹாராஷ்டிரர்களின் வழியை தேர்ந்தெடுப்பர். அவர்கள் வீர சிவாஜியின் வழியை பின்பற்றுவார்கள்" என்று கூறியது யார்?

a. பால கங்காதர் திலகர் b. C.R. தாஸ் c. சுபாஷ் சந்திர போஸ்

d. சந்திர சேகர் ஆசாதி e. விடை தெரியவில்லை

99. "British imperialism in India gave her a political unity under a third party in spite of the many discordant elements in Indian Society". Who said the above statement?

**a. Prof. Moon** b. Monier-Williams c. Colebrooks

d. M.G. Ranade e. Answer not known

"இந்திய சமுதாயத்தில நிலவிய பல்வேறு முரண்பட்ட சக்திகளுக்கு அப்பாலும் ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியம் இந்தியாவிற்கு ஓர் அரசியல் ஒற்றுமையை அளித்தது" இதனை கூறியது யார்?

a. பேராசிரியர், மூன் b. மோனியர்-வில்லியம்ஸ் c. கோல்ப்ரூக்ஸ்

d. M.G. ராணடே e. விடை தெரியவில்லை

100. Name the social reformer who submitted a memorial for the free press in the Supreme Court?

a. M.G. Ranade **b. Raja Ram Mohan Roy** c. Jothiba Phule

d. Ishwar Chandra Vidyasagar e. Answer not known

பத்திரிக்கை சுதந்திரம் வேண்டி உச்ச நீதிமன்றத்தில் ஓர் மனுவை தாக்கல் செய்த சமூக சீர்திருத்தவாதி யார்?

a. M.G. ராணடே b. இராஜா ராம் மோகன் ராய்

c. ஜோதிபா பூலே d. ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

e. விடை தெரியவில்லை